ராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இளைஞர்களின் உழைப்பு, அவர்களின் சக்தி போன்றவற்றை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தி சமூகத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தலும் அதற்குரிய வசதியளித்தலும் ;

(ஆ) இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் சமாதானம், தூய எண்ணம், பரஸ்பர உறவு மற்றும் ஒத்தாசை போன்றவற்றை வளர்த்தல் ;

(இ) தேவையிலுள்ள பாடசாலையின் சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு பரிசில், புலமைப்பரிசில் மற்றும் உதவிகள் அளித்தல், ஒழுங்காகப் பாடசாலைக்குச் சமுகமளிப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல், அவர்களின் கல்வி, கலாசார, அறிவியல் மற்றும் சமயம் சார்ந்த செயற்பாடுகளுக்கு உதவுதலும், அத்துடன் நிரந்தர மற்றும் நடமாடும் நூல் நிலையங்களை தாபித்தலும் ;

(ஈ) மனித உரிமை, மனிதாபிமானம், அடிப்படைச் சுதந்திரம், ஜனநாயகம், பன்மைவாதம் போன்றவற்றை விருத்தி செய்தலும் பாதுகாத்தலும் ;

(உ) இலங்கையில் வாழும் பல்வேறுபட்ட இனங்களுக்கிடையே இன ஒற்றுமையையும் அவர்களைப் பலப்படுத்தும் நோக்குடன் சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஊ) பெண்கள், சிறுவர்கள், அங்கவீனர்கள் மற்றும் ஏழைகள் மத்தியில் சுபீட்சத்தை உருவாக்குதல் ;

